# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL Tamil Monthly

தமிழ் மாத இதழ்

மலர் : 8 இதழ் : 9 ஜுன் : 2024 ரூ.20/-

Volume: 8 Issue : 9 June : 2024 Rs.20/-



## SHRI MAHA MERU MANDALI TRUST

Reg. No.DIT (E) No.2 (651) 12-13/Sl.No.90/13-14



# அஷ்டோத்ர ஸத சுக்ர வார ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயணம்

**91வது பாராயணம் - 03.05.2024 வெள்ளிக்கிழமை**
**ஸ்ரீ சிவகாம சுந்தரி ஸமேத இராமநாதேஸ்வரர் திருக்கோவில்**
போரூர், சென்னை.

**92வது பாராயணம் - 10.05.2024 வெள்ளிக்கிழமை**
**அருள்மிகு ஏழூர் அம்மன் திருக்கோயில்**
நங்கநல்லூர், சென்னை.

**93வது பாராயணம் - 17.05.2024 வெள்ளிக்கிழமை**
**அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோயில்**
கே.கே.நகர், சென்னை - 600 078.

**94வது பாராயணம் - 24.05.2024 வெள்ளிக்கிழமை**
**அருள்மிகு ஸ்ரீ துர்காலக்ஷ்மி சரஸ்வதி திருக்கோவில்**
மதநந்தபுரம், சென்னை - 600 116.

**95வது பாராயணம் - 31.05.2024 வெள்ளிக்கிழமை**
**அருள்மிகு ஸ்ரீ பொன்னியம்மன் திருக்கோவில்**
காரம்பாக்கம், சென்னை - 600 116.

---

தங்கள் வீடுகளுக்கு அருகில் உள்ள ஆலயங்களில் வெள்ளிக்கிழமைகளில் மண்டலி சார்பாக ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் செய்திட அனுக வேண்டிய எண்.

**9443495950, 9444060346**

# வேதபாரதி
## செய்திகள்



**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** - மஹாகவி பாரதி

## அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

### வேதமந்திரம் - 58

**அதி[1]யாஸநாத[3]தீ[1]பா[1]நாத்[3]யச்ச உக்[3]ராத்[1] ப்[1]ரதி[1]க்[3]ரஹாத்[1]**
**த[1]ந்நோ வருணோ ராஜா பா[1]ணிநாஹ்யவமர்ஸது[1].**

**- அகமர்ஷஜ ஸூக்தம்**

**பொருள் :** வழிபாடு செய்யப்படாமல் உண்ணப்படும் உணவு, தண்ணீர், நெறிப்படி வாழாதவனிடமிருந்து பெறப்பட்ட பொருள் – இவை மூலமாக எந்தப் பாவங்கள் என்னிடத்தில் உள்ளனவோ அவற்றைநீரின் அரசனாகிய வருணன் தனது கைகளால் போக்கிவிடுவாராக.

|| ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ||

**வேதபாரதி செய்திகள்**
**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 8 இதழ்: 9

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்

**ஆர்.வெங்கட்ராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 70101 88571

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

REGD No : TN/CC(S) / DN / 571 / 24-26
RNI No : 1282188
Title Code : TNTAM/2016/73726
R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**
(Tamil Monthly Magazine)
Published on : 1-7th (1st Week) Every Month
TN/PM G (CCR) / WPP 605/24-26 /
Valid from 01.01.2024 to 31.12.2026

புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்**
நெ.17, பாரதிதெரு, இந்திராநகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,
செ - 42. போன்: 9025864231


# புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| உங்கள் சிந்தனைக்கு | 5 |
| ஆனி மாத விசேஷங்கள் | 9 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 10 |
| ஸ்ரீமத் பாகவதம் | 13 |
| ஆதிசங்கரர் | 16 |
| மூதுரை (ஔவையார்) | 18 |
| அறுபத்தி மூன்று நாயன்மார்கள் | 19 |
| மஹாபெரியவாளின் அற்புத விளக்கங்கள் | 24 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் | 26 |
| தர்மத்தின் குரல் | 31 |
| பூக்களோடு பேசுவோம் | 35 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 38 |
| இராமாயணம் தரும் படிப்பினை | 42 |
| சென்னை திருமயிலை ஸ்ரீகபாலீஸ்வரர் திருக்கோயில் | 44 |



**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.200 |
| 10 வருட சந்தா | ரூ.1500 |

வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட
**VEDABHARATHI SEITHIGAL**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010246740**
**IFSC : CIUB 0000262**

நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
**D. சூரியநாராயணன்**
**R. வெங்கட்ராமன்**
**K. சங்கர், S. ரகுநாத்**
**Cell : 94451 02193, 98402 01625**

Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

## உங்கள் சிந்தனைக்கு....

## 9. மனம் கலங்காதிருக்க

மனிதனாக பிறந்த அனைவருமே வாழ்க்கையில் பல துன்பங்களை அனுபவித்துதான் ஆகவேண்டும். **"அடுக்கடுக்கான துன்பங்கள் வந்தாலும் மனங்கலங்காத அறிவுள்ளவன் அவைகளை அழித்துவிடுவான்"** என்கிறார் வள்ளுவர்.

**அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற**
**இடுக்கண் இடுக்கட் படும். (குறள் 625)**

**பொருள் :** இடைவிடாது மேலும் மேலும் வந்தாலும் கலங்காமல் இருப்பவனை அடைந்த துன்பமே துன்பப்பட்டு ஒழியும்.

நம்முடைய இதிகாசங்களிலும், புராணங்களிலும் எத்தனையோ பேர் பலவித துன்பங்கள் வந்தபோதும் மனம் கலங்காது இருந்துள்ளார்கள்.

1. தரித்ரனாக வாழ்ந்த போதிலும் "குசேலர்" மனம் கலங்கவில்லை.
2. ஊனமாகப் பிறந்து ஊர்ந்த போதிலும் "கூர்மதாஸர்" மனம் கலங்கவில்லை.
3. பிறவிக் குருடனாக இருந்தபோதிலும் "சூர்தாஸர்" மனம் கலங்கவில்லை.
4. மனைவி அவமானப்படுத்திய போதிலும் "சந்த் துகாராம்" மனம் கலங்கவில்லை.
5. தகப்பனே கொலை செய்ய முயற்சித்த போதும் "ப்ரஹ்லாதன்" மனம் கலங்கவில்லை.
6. சுடுகாட்டு வெட்டியானுக்கு அடிமையாக்கியபோதும் ராஜா "அரிச்சந்திரன்" மனம் கலங்கவில்லை.
7. உறவினர்களே சபை நடுவே அசிங்கப்படுத்திய போதும் "விதுரர்" மனம் கலங்கவில்லை.

8. இளம் விதவையான சமயத்திலும் "குந்திதேவி" மனம் கலங்கவில்லை.
9. கணவன் கஷ்டப்படுத்தியபோதும் "குணவதிபாய்" மனம் கலங்கவில்லை.
10. கை கால்களை வெட்டி பாழுங்கிணற்றில் தள்ளியபோதும் "ஜயதேவர்" மனம் கலங்கவில்லை.
11. இரு கைகளை வெட்டிய நிலையிலும் "சாருகாதாஸர்" மனம் கலங்கவில்லை.
12. பெற்றபிள்ளையை பறிகொடுத்த போதும் "பூந்தானம்" மனம் கலங்கவில்லை.
13. மஹா பாபியினிடத்தில் வேலை செய்தபோதும் "சஞ்சயன்" மனம் கலங்கவில்லை.
14. கூடப்பிறந்த சகோதரனே படாதபாடு படுத்தியபோதும் "தியாகராஜர்" மனம் கலங்கவில்லை.
15. நரசிம்ஹர் சன்னிதியில் விஷ தீர்த்தம் தந்தபோதும் "மஹாராஜா ஸ்வாதித் திருநாள்" மனம் கலங்கவில்லை.
16. சோழ ராஜனின் சபையில் கண்ணை இழந்த பின்பும் "கூரத்தாழ்வான்" மனம் கலங்கவில்லை.
17. தன்னை வாதநோய் தீவிரமாக தாக்கியபோதும் "நாராயண பட்டதிரி" மனம் கலங்காமல் 100 தசகங்கள் கொண்ட "ஸ்ரீமன் நாராயணீயத்தை" எழுதி முடித்தார்.

இவர்களைப்போல இன்னும் ஏராளம் ஏராளம், எப்படி மனம் கலங்காதிருக்க முடிந்தது இவர்களால்? தங்களோடு பகவான் எப்பொழுதும் இருக்கிறான் என்று இவர்கள் உணர்ந்தார்கள்.

நாமும் திடமாக பகவானை வழிபடுவோம். உறுதியுடன் உண்மையாக இருப்போம். அப்படி இருந்தால் நாமும் மனம் கலங்கவேண்டியதில்லை.

தொகுப்பு : **D. சூரியநாராயணன்**

# ஸந்த்யா வந்தன பயிலரங்கம் 2024

*வேதபாரதி தொடர்ந்து 15 ஆண்டுகளாக அந்தண சிறுவர்கள், பெரியவர்களுக்கு வருடம் வருடம் ஸந்த்யாவந்தன பயிலரங்கம் நடத்தி வருகிறது. இந்த ஆண்டு ஏப்ரல் 27, 28 சனி, ஞாயிறு 2 நாட்கள் சென்னை, துரைப்பாக்கம், ஏபிஎல் குளோபல் பள்ளியில் ஸந்த்யா வந்தன பயிலரங்கம் மிகச்சிறப்பாக நடைபெற்றது.*

*26-ம் தேதி இரவே 100 நபர்கள், குழந்தைகள், பெரியவர்கள் வந்து சேர்ந்தார்கள். திருச்சி ஸ்ரீ சந்த்ரசேகர் ஜி குழந்தைகளையும், பெரியவர்களையும் ஒருங்கினைத்து நிகழ்வுகள் குறித்த விபரங்கள், ஸந்த்யா வந்தன அவசியம், பெற்றோர் குறித்து குறிப்புகள் கொடுத்தார்கள்.*

*27-ம் தேதி ப்ராதஸந்த்யா, ஸமிதாதானம் மந்த்ரபடனம் மிக நிறைவாக நடைபெற்றது. பெரியவர்களுக்கு யோகா பயிற்சி நடைபெற்றது. காலை சிற்றுண்டிக்கு பின் மயிலை ப்ரம்ஹஸ்ரீ ஸ்ரீக்ருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், ஸ்ரீமதி பிரேமா க்ருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், ப்ரம்ஹஸ்ரீ மணி ட்ராவிட் சாஸ்திரிகள், குழந்தைகளையும், பெரியவர்களையும் ஆசிர்வாதம் செய்தார்கள்.*

*வேதபாரதி வேத வகுப்பில் பயிலும் குழந்தைகள் பெரியவர்கள் ஸ்ரீ ருத்ரம் மஹன்யாச பூர்வமாக மஹாருத்ர ஸங்கல்பத்துடன் ப்ரம்ஹஸ்ரீ கைலாஸ கனபாடிகள் குருஜி தலைமையில் 27, 28 இரண்டு நாட்களும் மிக நேர்த்தியாக நடைபெற்றது. 28 காலை ருத்ர ஹோமம் க்ரமார்ச்சனை மிக நன்றாக நடந்தது. தினமும் மாலை இரண்டு நாட்களும் விளையாட்டுக்கள், காலை மாலை இருவேளையும்*

*ஸமிதாதானம் சொல்லிக் கொடுக்கப்பட்டது.*

*மேற்கு மாம்பலம் டாக்டர் வெங்கட்ராகவன் மனம், ஓய்வு, குறித்த கேள்வி பதில் நிகழ்ச்சியாக நடத்தி விழிப்புணர்வு கொடுத்தார்கள்.*

*சனி மாலை 7.00 மணி முதல் 8.30 மணி வரை குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் மதுரை ஸ்ரீ க்ருஷ்ண ஜகந்நாதன் ஜி தனது பேருரை மூலமாக வேதநெறி வாழ்க்கை குறித்து அற்புதமாக பேசினார்கள்.*

*விழாவின் முத்தாய்ப்பாக ஞாயிறு பகலில் நெரூர் பூஜ்ய ஸ்ரீ வித்யா சங்கர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஆசியுரை வழங்கினார்கள்.*

*இரண்டு நாட்களும் பங்கெடுத்துக்கொண்ட வித்யார்திகள் தங்கள் குடும்ப விழா போல எல்லா நிகழ்வுகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு விழாவினை சிறப்பித்தார்கள்.*

*பள்ளி நிர்வாகம், சமையல் கலைஞர்கள் வழிகாட்டும் வேதபாரதியின் வேதவகுப்பு குருமார்கள், வேதபாரதி நிர்வாகிகள், தன்னார்வலர்கள், நன்கொடையாளர்கள் அனைவரும் எல்லா நலமும் வளமும் பெற்று வாழ வேண்டுகிறோம்.*

*வேதபாரதி.*

**குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும்**
**ஸ்லோக வகுப்புகள் ஆன்லைன் மூலமாக**
ஆசிரியர் : ஸ்ரீ முரளிதரன்,
ஸ்ரீமதி நீலா முரளி, மதுரை
தொடர்புக்கு : **9443489129**

## குரோதி வருஷம் - ஆனி மாத விசேஷங்கள்

**(ஜுன் 15.06.2024 முதல் ஜுலை 16.07.2024 வரை)**

| | | | |
|---|---|---|---|
| 17.06.2024 | ஆனி 3 | திங்கள் | ஏகாதசி |
| 19.06.2024 | ஆனி 5 | புதன் | ப்ரதோஷம் |
| 20.06.2024 | ஆனி 6 | வியாழன் | அனுஷம் |
| 21.06.2024 | ஆனி 7 | வெள்ளி | பௌர்ணமி |
| 25.06.2024 | ஆனி 11 | செவ்வாய் | சங்கடஹர சதுர்த்தி |
| 27.06.2024 | ஆனி 13 | வியாழன் | ஷஷ்டி |
| 02.07.2024 | ஆனி 18 | செவ்வாய் | ஏகாதசி, கார்த்திகை விரதம் |
| 03.07.2024 | ஆனி 19 | புதன் | ப்ரதோஷம் |
| 05.07.2024 | ஆனி 21 | வெள்ளி | அமாவாஸை |
| 10.07.2024 | ஆனி 26 | புதன் | சதுர்த்தி |
| 11.07.2024 | ஆனி 27 | வியாழன் | ஷஷ்டி |
| 12.07.2024 | ஆனி 28 | வெள்ளி | ஆனித் திருமஞ்சனம் நடராஜர் அபிஷேகம் |

### 05.07.2024 வெள்ளிக்கிழமை - அமாவாஸை

குரோதி நாம ஸம்வத்ஸரே, உத்தராயணே க்ரீஷ்ம ருதௌ, மிதுன மாஸே, க்ருஷ்ணபக்ஷே, அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ வாஸரயுக்தாயாம், அத்ய ப்ருகு, வாஸர யுக்தாயாம் ஆர்த்ரா நக்ஷத்ர யுக்தாயாம் விஸ்ணு யோக விஸ்ணு கரண ஏவம் குண விசேஷண விஸிஷ்டாயாம், அஸ்யாம், அமாவாஸ்யாயாம் புண்யகாலே தர்ஸ ஸ்ராத்தம் தில தர்ப்பன ரூபேண அத்ய கரிஷ்யே

### 16.07.2024 செவ்வாய்கிழமை - தக்ஷிணாய புண்யகாலம்

குரோதி நாம ஸம்வத்ஸரே, உத்தராயணே க்ரீஷ்ம ருதௌ, மிதுன மாஸே, சுக்லபக்ஷே, தசம்யாம் புண்யதிதௌ வாஸர : அத்ய பௌமம, வாஸர யுக்தாயாம் விசாக நக்ஷத்ர யுக்தாயாம் விஸ்ணு யோக விஸ்ணு கரண ஏவம் குண விஸேஷண விஸிஷ்டாயாம், அஸ்யாம், தசம்யாம் தக்ஷிணாயன புண்யகாலே கடக ஸங்க்ரமண ச்ராத்தம் திலதர்ப்பண ரூபேண அத்ய கரிஷ்யே

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

D. **சூரியநாராயணன்** பகுதி - 61

**அத்தியாயம் – 3**

## கர்ம யோகம்

அடுத்துவரும் ஸ்லோகங்கள் 14 மற்றும் 15 மிக மிக முக்கியமானவை, How the world is evolved (பரிணாமம்) என்பதைப் பற்றி பகவான் கூறுகிறார். How the world created என்று கூறவில்லை. How the world evolved. There is no creation and there is no creator. There is only evolution. Manifestation.நாம் பாலிலிருந்து வெண்ணையை உண்டாக்குவதில்லை. தேங்காயிலிருந்து தேங்காயெண்ணையை உண்டாக்குவதில்லை. அவை முன்பே அவற்றில் இருக்கிறது. நாம் செய்யும் சில process ல் அவை வெளிவருகின்றன. 5000 வருடங்களுக்கு முன்பே பகவான் கீதையில் இந்த உலகத்தின் Evolution பற்றி கூறியுள்ளார்.

**அன்னாத்3 ப4வந்தி பூ4தானி பர்ஜன்யாத3ன்னஸம்ப4வ:/**
**யக்ஞாத்3ப4வதி பர்ஜன்யோ யஜ்ஞ கர்ஸமுத்3ப4வ// (கீதை 3-14)**
**கர்ம ப்3ரஹ்மோத்3ப4வம் வித்3தி4 ப்3ரஹ்மாக்ஷரஸமுத்3ப4வம்/**
**தஸ்மாத் ஸர்வக3தம் ப்3ரஹ்ம நித்யம் யக்ஞே ப்ரதிஷ்டி2தம்//**
**(கீதை 3-15)**

**பொருள் : (இரண்டு ஸ்லோகங்களுக்கும் சேர்த்து)**

உயிரினங்கள் அனைத்தும் உணவிலிருந்து உண்டாகின்றன. மழையிலிருந்து உணவின் உற்பத்தி ஏற்படுகிறது. மழை வேள்வியிலிருந்து உண்டாகிறது. வேள்வி விதிக்கப்பட்ட கர்மங்களிலிருந்து உண்டாகிறது. கர்மங்களின் தொகுப்பு வேதத்தில்

உண்டாவது. மேலும், வேதம் அழிவற்ற பரமாத்மாவிடம் தோன்றியது என்று தெரிந்துகொள். ஆகவே, எங்கும் நிறைந்த அழிவற்றபரப்ரம்ம பரமாத்மா எப்பொழுதும் வேள்வியில் நிலைபெற்றிருக்கிறார் என்பது இதிலிருந்து தெரிகிறது.

**விளக்கம் :** இயற்கையானது எவ்வாறு நமக்கு நன்மை அளிக்கின்றது என்பதை இந்த இரண்டு ஸ்லோகங்களிலும் பகவான் விளக்குகிறார். உயிர் வாழ்வதற்காக எல்லா உயிர்களும் உண்ணும் உணவை **"அன்னம்"** என்று அழைக்கிறோம். உயிரினங்கள் நான்கு வகைப்படும். அவை

1. ஜராயுதம் : கருப்பையிலிருந்து வெளிவருபவை – மனிதன் சில விலங்குகள்.
2. உத்பிஜம் : பூமியை பிளந்து கொண்டு வெளிவருபவை. மரம், செடி, கொடி போன்றவை.
3. அண்டஜம் : முட்டையிலிருந்து வெளிவருபவை. பறவைகள், பாம்புகள் சில நீர் வாழ்வன போன்றவை.
4. சுவேதஜம் : வியர்வையிலிருந்து பிறக்கக்கூடியவை. புழு, பூச்சி, கொசு போன்றவை.

மேற்கண்ட நான்குவகை உயிரினங்களும் உணவிலிருந்தே பிறக்கின்றன. அந்த உணவினாலேயே உயிர் வாழ்கின்றன. இதைத்தான் பகவான் **"அன்னாத் பவந்தி பூதானி"** = "அன்னத்திலிருந்து உயிர் வகைகள் பிறக்கின்றன" என்கிறார். நாம் உண்ணும் உணவு (தானியங்கள்) எல்லாம் மண்ணில் நீரின் உதவியாலேயே விளைகின்றன. தண்ணீர் மழையின் மூலம் நமக்கு கிடைக்கின்றது. இதைத்தான் பகவான் **"பர்ஜன்யாத் அன்ன ஸம்பவ:"** என்கிறார். **"யக்ஞம்"** என்பது சிறப்பாக வேள்வியில் ஆகூதி கொடுக்கும் செயலைக் குறிக்கிறது. **"வேள்வி"** அதாவது **"யக்ஞம்"**

எனப்படுவது **“யாகம்”, “தானம்”, “தவம்”, “கர்மம்”** போன்ற சாஸ்திரங்களுக்கு உட்பட்ட எல்லாவிதமான செயல்களையும் குறிக்கின்றது. மனிதன் தன் கடமைகளை சரியாக செய்வதின் மூலமாக தேவர்களிடமிருந்து மழையை பெறுகின்றான். இதைத்தான் பகவான் **“யக்ஞாத்பவதி பர்ஜன்யோ”** = யக்ஞத்திலிருந்து மழை உண்டாகிறது என்கிறார். பற்றற்று செய்யும் எல்லா கர்மங்களும் வேள்வியே ஆகும்.

“வேதம்” என்பது பரமாத்மாவிடமிருந்து வெளிப்பட்டது. அந்த பரமாத்மாவே எல்லாவற்றுக்கும் மூலகாரணம். **(ப்ரஹ்மாக்ஷரஸமுத்பவம் = ஸ்லோகம் 15)** பரமாத்மா எங்கும் நிறைந்துள்ளார். **“தஸ்மாத் ஸர்வகதம் ப்ரஹ்மா”**.

**“வேதம்”** மனிதன் ஆற்றவேண்டிய கடமைகளை குறிக்கின்றது. வேள்விகளினால் மழை உண்டாகிறது. அந்த மழையினால் உணவு விளைகின்றது. உணவிலிருந்து உயிரினங்கள் தோன்றுகின்றன. அந்த உயிரினங்களில் ஒன்றான மனிதன் தன் கடமைகளின் மூலம் வேள்வியைச் செய்கின்றான்.

தனது கடமைகளைக் சரிவர செய்யாத மனிதனுக்கு ஏதாவது குறை வந்துவிடுமா? இதற்கு விடை அடுத்த ஸ்லோகத்தில் வருகிறது.

தொடரும்..

**குறிப்பு :** பிரதிமாதம் பௌர்ணமி அன்று மாலை வேதபாராயண வகுப்பு வித்யார்த்திகள் ஸ்ரீ ஸ்ரீ கைலாஸநாத கணபாடிகள் குருஜி முன்னிலையில் ஆன்லைன் வழியாக வேதபாராயணம் செய்கின்றனர்.

# ஸ்ரீமத் பாகவதம்

(ஸத்யம் பரம் தீமஹி)

பரிதி பகுதி - 40

## ஸ்கந்தம் 4
## வானத்தில் உதித்த புதிய நட்க்ஷத்ரம்
## துருவ சரித்திரம்

*துருவ சரித்திரம் (தொடர்ச்சி)*

*துருவன் பகவானை ஸ்துதித்ததும் அவனுடைய பிரார்த்தனையில் பெரிதும் சந்தோஷப்பட்ட பகவான் துருவனைப் பார்த்து "குழந்தாய், அரசகுல திலகமே! கல்யாண குணங்கள் நிரம்பியவனே! உன் எண்ணத்தை நான் அறிவேன். உன் உள்ளே* **"சிம்மாசனத்தில் உட்கார வேண்டும்"** *என்கிற ஒரு வாசனை இருப்பதை நான் அறிவேன். அதற்கு நான் ஆசீர்வாதம் செய்கிறேன். என்னிடம் நிலையான பக்தியோடு கூடியவனாய் இருபத்து ஆறாயிரம் வருடங்கள், இப்பூமண்டலத்தை ஆட்சி புரிந்து வருவாய். பின்னர் வான் மண்டலத்திலே உனக்கு யாரும் அடையாத ஒளி மயமான ஒரு உலகத்தைக் கொடுக்கிறேன். சப்த ரிஷிகளும் உன்னை பிரதக்ஷிணம் செய்து வணங்குவார்கள். அந்த* **"துருவ"** *ஸ்தானத்தை உனக்கு அளிக்கிறேன் என்று அனுக்ரஹித்துவிட்டு பகவான் மறைந்துவிட்டார்.*

*பகவான் மறைந்ததும் துருவன் அழுதுகொண்டே போகிறான். பகவானை பார்த்தபின்னும் துருவன் ஏன் அழவேண்டும்? துருவனே கூறுகிறான். "புலனடக்கம் கொண்டவர்களும், யோகிகளும் பல பிறவிகள் எடுத்துப் பலகாலம் தவம் செய்து பகவானைக் கண்டு முக்தியை வரமாகப் பெற்றிருக்கிறார்கள். நானோ ஆறேமாதங்களில் பகவானின் திருவடித்*

*தாமரைகளைக் கண்டேன். இருப்பினும் பகவானிடம் மோட்க்ஷபதத்தைக் கேட்காமல் ஒரு சிம்ஹாசனத்தை கேட்டு வாங்கிக்கொண்டு போகிறேனே” என்று அழுதானாம்.* **“பவச்சிதம் மயாசேஹும் பவம் பாக்ய விவர்ஜித”:** *(பாக 4-9-34)*

*பகவானைக் கண்ட பின் துருவன் நாடு திரும்புகிறான் என்றசெய்தி அரண்மனையிலும் நகரம் பூராவிலும் பரவியது. துருவனின் தாய் சுநீதி ஆனந்தத்தால் உள்ளம் துள்ள மகனை எதிர் நோக்கி நகர எல்லைக்கே ஓடி வந்து “குழந்தாய், உன் விரதம் பூர்த்தியாகிற்றா? எம்பெருமான் உனக்குத் தரிசனம் கொடுத்தாரா? என்று கேட்டு அவனை முத்தமிட்டு மகிழ்ந்தாள்.*

*பகவானைக் கண்டு திரும்பி வரும் மகனைக் காணப் பேராவல் கொண்டான் துருவனின் தந்தை அரசன் உத்தானபாதன். நகர எல்லைக்கு ஓடிச்சென்று மகனை ஆரத் தழுவிக்கொண்டான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாகப் பெருகியது.*

*(ஆனந்தக் கண்ணீர் குளுமையாகவும் இனிப்பாகவும் இருக்கும். துன்பத்தில் வரும் கண்ணீர் சூடாகவும் உவர்ப்பாகவும் இருக்கும்)*

*அரண்மனை சென்றதும் துருவன் தன் தந்தையின் பாதங்களிலும் தாய் மற்றும் சிற்றன்னையின் பாதங்களிலும் விழுந்து வணங்கி ஆசிபெற்றான். துருவனை வெறுத்து துரத்திய சிற்றன்னை* **“ஸுருசிக்கு”** *இப்போது பொறாமை ஏற்படவில்லை. காரணம் :*

*ஒருவர் ஸ்வாமியையோ அல்லது குருவையோ தரிசனம் செய்துவிட்டு திரும்பினால் அவருடன் அந்த ஸ்வாமியின் ஸாந்நித்யம் கூடவே வரும். அப்படி ஸ்வாமியின் ஸாந்நித்யம் அவரிடம் கூடவே இருக்கும்போது அவரைக் கண்டால் யாருக்கும்*

வெறுப்போ அல்லது மற்றஉணர்வுகளோ தோன்றாது. அதனால்தான் **ஸுருசிக்கு** கோபம் வரவில்லை.

துருவனுக்குத் தகுந்த வயது வந்ததும் உத்தானபாதன் துருவனுக்கு அரசனாக பட்டாபிஷேகம் செய்வித்து அழகு பார்த்துவிட்டு தான் தவம் செய்ய காட்டுக்குக் கிளம்பிவிட்டான்.

பல காலம் நல்லாட்சி புரிந்த துருவன் அரசாட்சியைத் துறந்து வனம் சென்று தவம் மேற்கொண்டான். அவனுக்கு கடைசியாக நிர்விகல்ப ஸமாதி சித்தித்தது. அப்போது வானிலிருந்து கோடி சூரிய பிரகாசத்தோடு ஒரு திவ்ய விமானம் வந்தது. அதிலிருந்து இறங்கிய **"நந்தன்; ஸுனந்தன்"** என்ற இரண்டு தேவ புருஷர்கள் துருவனிடம் வந்து துருவனை விநயத்துடன் வணங்கி "நாங்கள் பகவானால் அனுப்பப்பட்டு தங்களை அழைத்துப்போகவே வந்துள்ளோம்" என்றார்கள்.

விமானத்தில் அமர்ந்த துருவனுக்கு தன் தாயார் ஸுநீதியின் நினைவு வந்தது. தன் முன்னேற்றங்கள் அனைத்திற்கும் மூல காரணமான தாயைவிட்டு தான் மட்டும் வைகுண்டம் செல்வதா என்றெண்ணினான்.

துருவனின் எண்ணத்தை உணர்ந்த வேத புருஷர்கள் துருவனின் விமானத்திற்கு முன்னால் வேறொரு விமானத்தில் ஸுநீதி செல்வதை காண்பித்தார்கள். தன் தாய்க்கும் வைகுண்டம் கிடைத்ததை எண்ணி மகிழ்ச்சி அடைந்தான் துருவன்.

பகவத் பக்தனான துருவனது இந்த தூய்மையான சரித்திரத்தை ஈடுபாட்டுடன் அடிக்கடி கேட்பவர்களுக்கு பகவானிடம் இடையறாத பக்தி ஏற்படும்.

துருவ சரித்திரம் முடிவடைந்தது.

ஸ்ரீமத் பாகவதம் தொடரும்...

அத்வைத ஆசான்

# ஸ்ரீ ஆதிசங்கரர்

**ஆதவன்** **அத்தியாயம் — 12** **பகுதி 31**

## திவ்ய சந்திப்பு

ஸ்ரீ சங்கரர் தன் சிஷ்யர்களுடன் மண்டனமிச்ரரை சந்திப்பதற்காக பிரயாகத்திலிருந்து **"மாஹிஷ்மதிக்கு"** புறப்பட்டார். அவர்கள் நர்மதை நதி கரையோரமே ஒரு மாதத்திற்கும் மேல் நடந்து **"மாஹிஷ்மதி"** அடைந்தார்கள். அந்த நகரம் தற்போதைய மத்திய பிரதேசத்தில் நர்மதா நதி தீரத்தில் அமைந்திருந்தது. நகரத்தில் ரம்யமான ஏராளமான ஆலமரங்கள். அந்த மரங்களின் கீழே ஏராளமான சிறுவர்கள் வேதம் படித்துக் கொண்டிருந்தார்கள். அந்த ஊரோ ஒரு யக்ஞ பூமிபோல் காட்சி அளித்தது.

மண்டனமிச்ரருடைய இல்லத்தைத் தேடி அவர்கள் போகும்போது வழியில் ஒரு பாலகன் பம்பரம் விளையாடிக் கொண்டிருந்தான். ஸ்ரீ சங்கரர் அந்த பாலகனை அழைத்து "ஹே பாலகா மண்டனமிச்ரர் க்ருஹம் எது?" என்று வினவினார். அதற்கு அந்த பாலகன் "யாருடைய வீட்டு வாசலில் கூண்டில் அடைக்கப்பட்ட கிளிகள் "வேதாஹ ப்ராமாணம்" "வேதாஹா பிரமாணம்" என்று சொல்லுகின்றனவோ அதுவே மண்டனமிச்ரரின் க்ருஹம் என்று அறிக" என்று கூறிவிட்டு ஓடிவிட்டான்.

அந்த பாலகன் சொன்ன அடையாளத்தை மனதில் கொண்டு ஸ்ரீ சங்கரரும் சிஷ்யர்களும் அத்தகைய வீட்டைத் தேடிக் கொண்டு சென்றார்கள். அந்த பாலகன் அடையாளம் கூறிய வீடு வந்தது. வாசலில் கிளிகளும் கத்திக்கொண்டிருந்தன. அது தான்

மண்டனமிச்ரர் க்ருஹம் என்று அறிந்துகொண்டார் ஸ்ரீசங்கரர்.

அன்றைய தினம் மண்டனமிச்ரர் க்ருஹத்தில் ச்ராார்த்தம் நடந்து முடிந்திருந்தது. ஒரு யதிகள் குழு தன் க்ருஹம் நோக்கி வருவதைக் கண்ட மண்டனமிச்ரர் பக்தியுடன் ஸ்ரீசங்கரரை எதிர் கொண்டு அழைத்து க்ருஹத்தின் உள்ளே அழைத்துச் சென்று அமரவைத்து அவருடைய பாதங்களைக் கழுவி, தான் ப்ரோக்ஷணம் செய்து கொண்டு தன் பத்தினிகளுக்கும் மற்றவர்களுக்கும் ப்ரோக்ஷணம் செய்தார். பிறகு சங்கரரை நோக்கி **“ஹே! மஹாயோகின், ஸ்வாகதம். கிம் கரவாணி தே”** உங்களுக்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்? எங்களுடைய பிக்ஷையை ஸ்வீகரித்து அனுக்ரஹம் செய்யவேண்டும் என்றார்.

அதற்கு ஸ்ரீ சங்கரர் “ஹே! த்விஜேந்திரரே! நாங்கள் வாதஸங்கல்பத்துடன் குமாரிலபட்டர் கேட்டுக்கொண்டதன் பேரில் இங்கு வந்துள்ளோம். எங்களுக்குத் தேவை வாதபிக்ஷையே அன்றி வயிற்று பிக்ஷஅல்ல” என்று பதில் அளித்தார்.

குமாரிலபட்டரின் பேரைக் கேட்டதும் மண்டனமிச்ரரின் முகபாவமே மாறிவிட்டது. அவர் ஸ்ரீ சங்கரரிடம் “பகவான், முதலில் அன்னபிக்ஷயை ஏற்றுக்கொள்ளுங்கள். அதன் பிறகு வாதபிக்ஷயை நாளைக்கு வைத்துக்கொள்ளலாமே” என்றார்.

ஸந்நியாஸியை விஷ்ணு இலையில் அமர்த்துவது சாஸ்த்திர ஸம்மதம் தான் என்பதால் ஸ்ரீசங்கரரை விஷ்ணு இலையில் அமர்த்தி அன்னம் பரிமாறினார்கள். ஸ்ரீ சங்கரர் அன்னமளித்த அந்த அன்னையை சாரதாதேவியாகவே ஸ்துதித்து பிக்ஷயை அருந்தினார்.

தொடரும்..

# ஔவையார்
# "மூதுரை"

**"மூதுரை"** *= முதுமை + உரை = மூதுரை பழமையான அறக்கருத்துக்களைக் கொண்டிருப்பதால்* **"மூதுரை"** *என அழைக்கப்படுகிறது. இந்நூலில் மொத்தம் 30 வெண்பா பாடல்கள் அமைந்துள்ளன.*

## வெண்பா 21

**இல்லாள் அகத்து இருக்க இல்லாதது ஒன்று இல்லை**
**இல்லாளும் இல்லாளே ஆமாயின் – இல்லாள்**
**வலி கிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்இல்**
**புலி கிடந்த தூறாய் விடும்.**

**பொருள் :** *நல்ல மனைவி மட்டும் அமைந்துவிட்டால் அந்த இல்லத்தில் இல்லாதது என்று எதுவுமே இல்லை. ஆனால் அந்த இல்லாள் (மனைவி) குணமில்லாதவளாக (இல்லாள்) இருந்துவிட்டாலோ, கடுமையான எதிர் வார்த்தைகள் பேசி விட்டாலோ அந்த இல்லம் புலியின் குகை போலாகிடும்.*

**விளக்கம் :** *ஒரு நல்ல மனைவி இருந்துவிட்டால் அந்த வீட்டில் "அது இல்லை, இது இல்லை" என்று சொல்லி வருத்தப்பட ஒன்றுமே இருக்காது. ஆனால் அதே வேளையில் அந்த மனைவி எவர்க்கும் அடங்காமல், அனைவரையும் எதிர்த்து கடுமையான சொற்களால் பேசி மற்றவர் மனம் நோகும்படி நடந்து கொள்பவளாக இருந்தால் அந்த வீடு புலி தங்கிப்போன புதர்போல சிதைந்து போய்விடுமாம்.*

தொகுப்பு : **பரிதி**

*இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்*

**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,**

வேளச்சேரி

## அறுபத்தி மூன்று (63) நாயன்மார்கள்

*அருணன்* *17/63*

## 17. சண்டேசுவர நாயனார் (தை – உத்திரம்)

எல்லா சிவன் கோவில்களிலும் **"சண்டிகேஸ்வரர்"** சன்னிதி தனியாக இருக்கும். அந்த சன்னிதி அருகில் சென்றதும் ஒரு சில பக்தர்கள் அந்த சண்டிகேஸ்வருக்கு எதிராக தங்கள் கைகளைத் தட்டுவார்கள் அல்லது சொடுக்கு போடுவார்கள். காரணம் கேட்டால் இந்த ஸ்வாமிக்கு காது கேட்காது என்பார்கள். ஒரு சிலர் தங்கள் ஆடையிலிருந்து ஒரு நூலை கிழித்துப் போடுவார்கள். இவ்வாறு செய்வது தவறு, பின்பு இந்த சன்னிதியில் என்ன செய்ய வேண்டும்? அதை விளக்குவதுதான் இந்த மாத **"சண்டேசுவர நாயனார்"** சரித்திரம்.

கும்பகோணத்திலிருந்து திருப்பனந்தாள் செல்லும் வழியில் அமைந்துள்ளது **"சேய்ஞலூர்"** என்னும் ஊர். அந்த ஊரில் **"எச்சதத்தன்"** என்ற அந்தணர் வாழ்ந்துவந்தார். வேத வேள்வியை போற்றி வாழ்ந்த அவருடைய மனைவி பெயர் **"பவித்திரை".** இவர்களுடைய நீண்ட நாள் தவத்தின் பலனாக இவர்களுக்கு பிறந்த குழந்தைக்கு **"விசாரசருமன்"** என்று பெயர் சூட்டினார்கள். சிறு வயதிலேயே **"விசாரசருமன்"** எல்லாவித வேதம், புராணம் ஆகியவற்றை கற்று தேர்ந்தான்.

ஒரு நாள் இந்த விசாரசருமன் வெளியே போய்க்கொண்டிருந்த போது ஒரு இடத்தில் சிலர் மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார்கள். அந்த மாடுகளில் ஒரு மாடு ஒரு சிறு குழந்தையை

முட்டபோக இருந்தது. அப்போது அந்த மாடு மேய்ப்பவர் அந்த மாட்டின் கொம்பை பிடித்து நிறுத்தி அந்த மாட்டை தடி கொண்டு அடிக்க ஆரம்பித்தார். இதைப்பார்த்த **"விசாரசருமன்"** உள்ளம் கலங்கியது. அந்த மாட்டை அடிப்பவனிடம் சென்று அவனிடமிருந்து அந்த கொம்பை வாங்கிக்கொண்டு மஹாலக்ஷ்மி ஸ்வரூபமான பசுவை அடிப்பதனால் ஏற்படும் பாவங்களைக் குறித்து வேதங்கள் என்ன சொல்லியிருக்கின்றன என்று அவனுக்கு உபதேசம் செய்தபின் "இனி பசுக்களை நீ மேய்க்கவேண்டாம் நானே மேய்த்துக்கொள்கிறேன்" என்று கூறினான். அதற்கு அந்த மாடு மேய்ப்பவர்களும் சம்மதம் தெரிவித்தார்கள்.

விசாரசருமன் மாடு மேய்க்க ஆரம்பித்தது முதல் பசுக்கள் அளவிற்கு அதிகமாக பால் கொடுத்தன. இதைக் கண்ட விசாரசருமனுக்கு அந்த பாலைக் கொண்டு சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. உடனே அவன் மணியாற்றங்கரையில் மணலால் ஒரு சிவலிங்கத்தை செய்து புதிய பாண்டங்களைக் கொண்டுவந்து பசுவிலிருந்து பாலைக் கறந்து சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்து அங்கு கிடைத்த வில்வ இலைகளையும் பூக்களையும் கொண்டு அர்ச்சனை செய்தான். இந்த அன்பு பூஜை மன மகிழ்ச்சியோடு நாள்தோறும் நடந்துவந்தது. இவருக்கு பால் கறந்த மாடுகள் வீட்டிற்குச் சென்றால் பால் கறக்காது. இதைக் கண்ட பசுக்களின் உரிமையாளர்கள் விசாரசருமன்தான் இப்படி பாலை கறந்து லிங்கத்திற்கு அபிஷேகம் செய்துவிடுகிறார் என்பதை கண்டுபிடித்து அவருடைய தந்தை எச்சதத்தரிடம் தெரிவித்தார்கள்.

உண்மையை அறிய எச்சதத்தன் ஒரு நாள் தன் மகன் விசாரசருமனைப் பின் தொடர்ந்தார். வழக்கமான இடத்தை அடைந்த விசாரசருமன் தினமும் செய்வதுபோல் கலசத்தில் பாலைக்கறந்து அவன் பிடித்து வைத்திருந்த சிவனுக்கு அபிஷேகம் செய்ய ஆரம்பித்தான். இதை கண்ட எச்சதத்தன் கோபம் கொண்டு ஒரு கொம்பால் தன் மகனின் முதுகில் ஓங்கி ஓங்கி அடித்தான். ஆனால் விசாரசருமன் எந்த எதிர்ப்பும் தெரிவிக்காமல் தொடர்ந்து அபிஷேகம் செய்துகொண்டிருந்தான். மேலும் கோபம் அடைந்த அவனுடைய தந்தை அபிஷேகத்திற்கு பாலை வைத்திருந்த கலசத்தை தன் காலால் எட்டி உதைத்தான். அப்போதுதான் விசாரசருமனுக்கு தன் தந்தை செய்த காரியம் தெரிந்தது. அவன் கோபத்தில் அருகில் இருந்த ஒரு கோலை எடுத்தான். திருவருட் பலத்தால் அந்த கோல் கோடரியாக மாறியது. அதைத் தன் தந்தையின் கால்களின்மேல் வீசினான். கால்கள் இரண்டும் துண்டாகி கீழே விழுந்தான் அவன் தந்தை.

அந்த நேரத்தில் காட்சி கொடுத்த சிவபெருமான் ஒரு கொன்றை மாலையை விசாரசருமன் தலையில் சூடி “உன் பக்தியின் பெருமையை உலகத்திற்கு காட்டியிருக்கிறாய் என்னுடைய பொருட்களுக்கு இனி நீ காவலாக விளங்குவாய். மேலும் நீ நாயன்மார்களில் ஒருவராக விளங்குவாய் என்று கூறி அவனுக்கு சண்டேசுரபதம் அருளினார்.


இப்படி வழிபாட்டிற்கு உரியவராக வந்தவர்தான் விசாரசருமாராக இருந்து இன்று நாம் சிவ ஆலயங்களில் வழிபடும் **“சண்டேசுவர நாயனார்”.**

இவர் சிவனுடைய பொருட்களுக்கு பாதுகாவலர். ஆகையால் சிவாலயங்களில் சிவனை

வழிபட்டபின் சண்டகேசுவரர் சன்னிதிக்கு வந்து "இறைவனுடைய அருட்பிரசாதத்தை மட்டும் தான் நான் இங்கிருந்து எடுத்துச் செல்கிறேன். வேறு எந்த பொருட்களையும் எடுத்துச் செல்லவில்லை" என்று சொல்லி அவருக்கு எதிரில் கைகளை துடைத்துக் காட்டவேண்டுமே தவிர கைகளைத் தட்டியோ சொடக்கு போட்டோ சப்தம் எழுப்பக்கூடாது.

இவரை நாம் தினமும் வழிபட நமக்கு எல்லா நலமும் கிடைக்கும்.

இவருடைய குரு பூஜை வருடா வருடம் தை மாதம் உத்திர நட்க்ஷத்திரத்தில் நடைபெறுகிறது.




நாயன்மார்கள் கதை தொடரும்......

# ஏன்? எதற்கு? தெரிந்துகொள்வோம்

## 5. பகவானுக்கு உடைக்கும் தேங்காயில் "குடுமி" அவசியமா?


நாம் கோவிலுக்குப் போகும்போது பகவானுக்கு அர்ச்சனை செய்வதற்காக தேங்காய், பழம், பூ, வெற்றிலை பாக்கு, கற்பூரம் ஆகியவற்றை வாங்கிச் செல்வோம். கடையில் வாங்கும்போது தேங்காயில் "குடுமி" இருக்கும் கோயில் குருக்களிடம் அவற்றைக் கொடுத்தால் அவர் பூவை பகவானுக்கு சார்த்திவிட்டு குடுமியுடன் இருக்கும் தேங்காயை இரண்டாக உடைத்துவிட்டு பின் அந்த குடுமியை அகற்றிவிட்டு பழங்களையும் சேர்த்து பகவான் பாதத்தில் வைத்து அர்ச்சனை செய்தபின் அவற்றைபிரசாதமாக நமக்கு கொடுப்பார். பகவானுக்கு சமர்ப்பிக்கும்போது ஏன் குடுமியை அகற்றவேண்டும்?

பொதுவாக பகவானுக்கு படைக்கும் பொருள் எதுவாக இருந்தாலும் அது பின்னம் அற்றதாக இருக்கவேண்டும். ஆகையால் தான், தேங்காயை உடைக்கும்போது குடுமியுடன் (பின்னம் அற்றதாக) இருக்கிறது. உடைப்பதற்கு முன் தேங்காயில் உயிரோட்டம் உண்டு.

உடைத்த பிறகு?

தேங்காயை உடைத்த பிறகு அது பகவானுக்கு படைக்கும் பிரசாதமாக கருதப்படுவதால் அதில் உள்ள குடுமி அகற்றி சுத்தமாக படைக்கப்படுகிறது.

**-பகலவன்**



# மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

## தியானம் செய்யுங்கள்

“தியானம் செய்யுங்கள்; மற்றவர்களைச் செய்யச் சொல்லுங்கள்” என்று பகவத்பாதாள் எங்களுக்கு இட்ட ஆக்ஞையைத் தெரிவித்தேன். உங்களைத் தியானம் பண்ணுமாறு செய்கிறேனோ இல்லையோ, “தியானம் செய்யுங்கள்” என்றஆதி ஆசார்யாள் ஆக்ஞையைத் தெரிவித்த அளவுக்காவது என் கடமையைச் செய்தவனாகிறேன். அதைச் சொல்லும் பாக்கியம் எனக்கு உங்களால் கிடைத்தது. இது ஆசார்யாள் எதைச் சொல்ல ஆக்ஞை செய்தாரோ, அதைக் கேட்கும் பாக்கியம் எனக்கு உங்களால் கிடைத்தது. ஶ்ரீ ஆசார்யாள் எதைச் சொல்ல ஆக்ஞை செய்தாரோ, அதைக் கேட்கும் பாக்கியம் உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. உங்களால் என் கடமையில் ஒரு பங்கையேனும் செய்த லாபத்தை அடைந்தேன். நீங்களும் ஆத்ம லாபத்துக்கான உபாயத்தைக் கேட்டுக் கொண்டீர்கள். நமக்குள் பரஸ்பர லாபம் உண்டாயிற்று.

இதை நன்றாக மனஸில் வாங்கிக் கொண்டு பூரண லாபம் பெறுங்கள். இந்த ஜன்மா முடிகிறபோது, “அப்பாடா, பிறவி எடுத்ததன் பலனை அடைந்து விட்டோம். இனி பயமில்லாமல் போய்ச் சேரலாம்” என்று உறுதியும் திருப்தியும் பெறுகிறஅளவுக்கு நல்ல மார்க்கத்தில் நாம் செல்லப் பரமேசுவரன் எல்லோருக்கும் பூரண அநுக்கிரகம் புரிவானாக!

தொடரும்..

உ

திருமண பொருத்தம் இலவசம்

(அனைத்து சமூகத்தினருக்கும்)

வாட்ஸ்அப் மூலம் மட்டும்



பையன்கள் பெண்கள்
ஜாதக நகல்களை
வாட்ஸ் அப்பில்
அனுப்புதல் வேண்டும்.

தேதியூர். V.J. ராமன்

ஆத்மார்த்த ஜோதிடர்

9003195599
9445230940

## சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை



### கர்ம யோகம் — 2

தாம் ஏற்றுக் கொண்ட பழத்தை அவர் தம் இஷ்டம் போல் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். அவர் சர்வசக்தனாய் இருப்பதால், பழத்தை மறையச் செய்யவோ அல்லது தாம் உண்ட பிறகும் பழத்தை முழுமையாக மீண்டும் அதே இடத்தில் வைத்துவிட்டுச் செல்லவோ அவருக்கு முற்றிலும் சாத்தியமாகும். மனித சக்தியால் புரிந்து கொள்ள முடியாத வகையில் அவர் அப்பழத்தைச் சாப்பிட்டுவிட்டு, மீதியை நான் சாப்பிடுவதற்காக வைத்திருக்கிறார் என்றே நான் உறுதியுடன் நம்புகிறேன். என்னைப் பொருத்த வரையில், இறைவன் சாப்பிட்ட மிச்சத்தைத் தான் நான் நைவேத்தியத்திற்குப் பிறகு சாப்பிடுகிறேன்.

‘சமீபத்தில் உன்னுடைய அரசியல் கட்சித் தலைவர் நம் ஊருக்கு வந்திருந்தார். அப்பொழுது நீயும் மற்றவர்களும் சேர்ந்து அவருக்குப் பல மாலைகளையெல்லாம் கொடுத்து வரவேற்று அவரைச் சந்தோஷப்படுத்தினீர்கள். நீங்கள் கொடுத்த எல்லா மாலைகளையும் அவர் அணியவில்லை; அணியவும் முடியாது. தான் பெற்றுக் கொண்ட மாலைகளுள் ஒன்றை அவர் உனக்களித்தபோது நீ அதை சந்தோஷமாக வாங்கிக் கொண்டாய். அங்கே வந்திருந்த தனது ஆதரவாளர்களின் பெருங்கூட்டத்தின் நடுவில் அவர் நடந்து செல்லும்போது, தன் கையிலிருந்த மாலைகளை ஒவ்வொன்றாக அவர் அக்கூட்டத்தினர்களுக்கு வீசி எறிந்தார்.

தொடரும்...



ஸ்ரீ சாய் பேலஸ்

SHRI SAI PALACE

Marriage Hall | Banquet Hall | Terrace Party Space

Cell : 89256 69998 / 95661 13347



Facilities Offered :

- 800 Capacity
- 350 Seats in Hall
- 120 Dining Seats
- 9 A/c Rooms
- Centralised A/c
- Double Lift Facilities
- Kitchen & Utensils
- Pure Vegetarian
- Dedicated Parking for 50 Cars
- Power Back-Up
- Uninterrupted Events

No.8A, Nagappa Avenue, Thiruvalluvar Street,
Vadakkupattu, Medavakkam, Chennai - 600 100.
e-mail : events@shrisaipalace.com
web : www.shrisaipalace.com

## ஊரப்பாக்கம் - வேதபாரதி மகளிர்குழு துவக்க நாள் 26.05.2024



# ராஜலட்சுமி கல்யாண மண்டபம்


வேளச்சேரி மெயின் ரோடு, தண்டீஸ்வரம்,
சென்னை - 600 042.



- 800 பேர் அமர்ந்து ஆசிர்வதிக்க ஏ/சி ஹால்.
- சகல வசதிகளுடன் கூடிய மணமகன், மணமகள் அறைகள்.
- உறவினர்கள் தங்க - குளிருட்டப்பட்ட அறைகள்.
- விசாலமான கார் பார்க்கிங்.
- வெகு அருகில் சிவன், பெருமாள் ஆலயங்கள்.
- நகருக்கு மத்தியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற மண்டபம்.
- 24 மணி நேரமும தண்ணீர் & மாடுலர் கிச்சன் வசதி.


தொடர்புக்கு

**48625585 / 9840545585**


வேதஸ்ரேணி
Mini Function Hall (A/C)
Traditional Ambience with Modern Amenities
Ayush Homam | Upanayanam | Birthdays | Engagement |
Sangeeth | Mehendi | Wedding | Valakaapu | Seemandham |
Shastiapthapoorthi | Sathabhishekam | Corporate Events
Ac Hall & Dining | Lift | Power Back Up | Car Parking |
CCTV | Hall Capacity- 150 -200 | Guest Rooms-2
Vedashreni, No 215, 3rd Street, Ramnagar Vijayanagar, Velachery, Chennai-42
95002 67471 | 98414 46897
VEG FOOD ONLY


Rs.1000 inclusive of tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Shri Meera Labs Pvt Ltd
Contact
9952972436 / 7824807801
WOPPER

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்
## அத்தியாயம் 3 : வேதங்கள்



*3-8* வேதங்களில் விஞ்ஞான உண்மைகள் தொடர்ச்சி :

இப்பொழுது சாண்டோக்ய உபநிஷத்தில் காணப்படும் மந்திரத்தை காண்போம்; மரத்தின் விதை மரம்தான்; அவ்வாறே, ஒரு பறவையின் விதை பறவையே; முட்டையல்ல. படைப்பில், மரம்தான் முதலில் தோன்றியது என்பதை இது காட்டுகிறது. இந்த மந்திரத்தை விவாதிக்கும் போது 'மரத்தின் வித்து, விதையென்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்கும் போது, மரம்தான் மரத்தின் விதை என்று வேதங்கள் எப்படிச் சொல்கின்றன? என்ற வினாவை சங்கராச்சார்யார் எழுப்புகிறார். பின்னர் அவரே வேதவாசகத்துக்கு ஆய்வு சார்ந்த நிரூபணம் தந்து பதிலளிக்கிறார். ஆம்; வேதங்கள் மனிதனின் அறிவாற்றலைச் சார்ந்திருந்தால், அவ்வாறு சொல்லியிருக்க முடியாது. அவ்வாறன்றி வேதங்களே ஞானத்தின் மூலஸ்தானம் என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். மேலும் பல தாவரங்கள் விதையின்றி தோன்றுவதையும் தாவரம் இன்றி எந்த விதையும் தோன்றவில்லை என்பதையும் நாம் காணவில்லையா? எனவே வேத வாக்கியத்தைச் சந்தேகிக்கக்கூடாது. பெரிய விஞ்ஞானிகள், பெருமுயற்சிகள் செய்து மிகுந்த ஆராய்ச்சிக்குப்பின் கண்டுபிடிக்கப்பட்டவை, வேதங்களில் சாதாரணமாகச் சொல்லப்பட்டிருப்பது விந்தையே.

தொடரும்..

உ

## வேதபாரதி - ஊரப்பாக்கம்
## சமஷ்டி உபநயனம் - 7.07.2024

*நேரம் : காலை 6.00 மணி முதல் 12.30 மணி வரை*
*இடம் : ஊரப்பாக்கம்*

வேதபாரதி குழுவினரின் குழந்தைகளுக்கு சமஷ்டி உபநயன விழா

அனைவரும் வருக! வருக!!

உ

## யுவஸ்ரீ வாழ்வியல் பயிலரங்கம்
## பெண்மையைப் போற்றுவோம்

*நாள் : 14.07.2024, ஞாயிற்றுக்கிழமை*
*நேரம் : காலை 8.00 மணி முதல் மாலை 5 மணி வரை*
*இடம் : APL குளோபல் பள்ளி, துரைப்பாக்கம்*

7வது வகுப்பிற்கு மேல் படிக்கும் பெண் குழந்தைகள் தங்கள் பெற்றோர்களுடன் கலந்து கொள்ளலாம்.

பாரம்பர்ய உடையில் கலந்து கொள்ளலாம். பாரம்பர்ய விளையாட்டுகள், தனித்திறமை, கலந்துரையாடல், கூட்டு பஜன் நடக்க உள்ளது.

சிறப்பு நிகழ்ச்சி : **பாரதீய**
செல்வி சிவஸ்ரீ ஸ்கந்த ப்ரசாத்
நடனம், இசைக்கலைஞர், சென்னை.
முன்பதிவிற்கு :
*7010188571 / 99400 86122*

## பூஜ்ய ஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள் ஆராதனை

*நாள் : 01.08.2024 இடம் : சென்னை*

**அனைவரும் வருக! வருக!!**

**மேலும் தொடர்புக்கு : 70101 88571**

உ

ஸ்ரீ குருப்யோ நம:

## புதிய வேத வகுப்புகள் ஆரம்பம்

வேதபாரதி அமைப்பின் சார்பில் ஆன்லைன் வழியாக வார நாட்களிலும், வார இறுதி நாட்களிலும் வேத வகுப்புகள் துவங்க உள்ளோம். தகுதி உள்ள அந்தண சிறுவர்கள், பெரியவர்கள் கலந்து கொள்ளலாம்.

மேலும் தொடர்புக்கு :

ஸ்ரீ ராமகிருஷ்ணன் - 99949 26537,

ஸ்ரீ சங்கர் - 94451 02193

உ

ஸ்ரீ குருப்யோ நம:

## ஸ்ரீ சங்கர ஜெயந்தி 2024

வேதபாரதி வேதபாராயணக் குழுவினரால் 12.05.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணி முதல் 5.30 மணி வரை சென்னை மந்தைவெளி ஸ்ரீ சங்கர குருகுலத்தில் வேதபாராயணம் நடைபெற்றது. வேதபாரதி பிரதி மாதம் பௌர்ணமி நாளில் எல்லோரும் சூக்தங்கள் பாராயணம் செய்வது ஸ்ரீ வெங்கடகிருஷ்ணன் வேதவகுப்பு ஒருங்கிணைப்பாளர் ஏற்பாட்டில் மிகவும் மன நிறைவுடன் வேதபாராயணம் நடைபெற்றது.

உ

## கோடி காயத்ரீ ஜப யக்ஞம் 2024
## ஓசூர் - 30.06.2024 ஞாயிற்றுக்கிழமை

நேரம் : காலை 6.00 மணி முதல் 1.00 மணி வரை

இடம் : ஸ்ரீ வேணுகோபால ஸ்வாமி கோவில்,
கோகுல் நகர், ஓசூர்

அனைவரும் வருக, வருக.

இறையருள் பெறுக.

செல் : 95903 35251 / 9443634283

உ

## வேத பாராயணக்குழு - வேதபாரதி

நாள் : 05.05.2024, ஞாயிற்றுக்கிழமை
இடம் : ஸ்ரீ நந்தீஸ்வரர் திருக்கோவில், ஆதம்பாக்கம்

காலை 7.00 மணி முதல் 10.00 மணி வரை வேதபாரதி வேதபாராயணம் நடைபெற்றது. கோவில் தர்மகர்த்தா ஸ்ரீ சீதாராம குருக்கள் வேதபாரதி புத்தககுழு உறுப்பினர், ஸ்ரீ சுந்தரவிஜயம் நிர்வாகி, ஸ்ரீ மணிசங்கர் ஜி வழி காட்டினார்கள். வேதபாரதி குழுவினருக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.

உ

## நீர்மோர் வழங்கும் விழா

வேளச்சேரி, பேபி நகர், வேதபாரதி குழுவினர் மற்றும் கிரீன் வேளச்சேரி நிர்வாகத்தின் சார்பில் 14.04.2024 சித்திரை வருடப்பிறப்பு முதல் 31.05.2024 முடிய தினமும் 100 பேருக்கு நீர் மோர் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

தினமும் காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை நடைபெற்றது. கிரீன் வேளச்சேரி நிர்வாகிகள் ஸ்ரீ குமாரராஜா, ஸ்ரீ பாலச்சந்தர் அவர்களும் வேதபாரதி பொறுப்பாளர் ஆர். வெங்கட்ராமன் ஏற்பாடுகள் செய்திருந்தார்கள்.

ஸ்ரீமதி அன்னபூரணி, ஸ்ரீமதி காமாட்சி, ஸ்ரீமதி சிவகாமி, ஸ்ரீமதி சங்கீதா, தினமும் சிறந்த சேவை செய்தார்கள். நன்கொடையாளர்கள், பொருள் தினமும் கொடுத்தவர்கள் எல்லோரும் எல்லா வளமும் நலமும் பெற்று வாழ பிரார்த்திக்கிறோம்.

நன்றி, நன்றி, நன்றி.

அன்புடன்,
வேதபாரதி.

# பூக்களோடு பேசுவோம்

டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்

## "பேரதிசய "ப்ரும்மகமலம்"



பூக்களோடு பேசுவது உங்களுக்குப் பிடித்திருக்கும் என்று நினைக்கிறேன். முடிந்தால் அவ்வப்போது உங்கள் கருத்துக்களை பதிவு செய்யுங்கள் வாசகர்களே. எங்கள் எழுத்துக்களை செம்மைப்படுத்திக்கொள்வதற்கு உதவும். சிவனுக்குரியதும், ஸ்ரீ கிருஷ்ணனுக்குரியதுமான புஷ்பங்களைப் பார்த்தோம். அவர்களுக்கு பிரியமான இதர பூக்களோடு பேசவிருக்கிறோம். மெதுவாகவும், ஆத்மார்த்தமாகவும், இந்த இதழில் படைப்புக்கடவுளான ப்ரும்மாவுக்குரிய அற்புத, அதிசய, அரிய புஷ்பமான "ப்ரும்ம கமலம்" பற்றிப் பேசுவோம். நினைத்தோமா, பறித்தோமா, சமர்ப்பித்தோமா என்று இந்த மலரை நெருங்கி விட முடியாதபடி, ஹிமாலய பகுதிகளில் மட்டும் காட்சிதரும் மலராக இது இருக்கிறது என்றாலும், இந்த நவீன யுகத்தில், உலகமே நம் உள்ளங்கையில் சாத்தியமாவது போல், நர்சரிக்களின் அபார வளர்ச்சியினால் வீட்டிலேயே வளர்க்கக் கிடைக்கிறது என்று அறியமுடிகிறது. இருப்பினும் இதனை வளர்ப்பதும், அதில் பூ மலர்வதும் "ப்ரும்மபிரயத்தனம்" தான் என்றேசொல்ல வேண்டும்.

சூரிய காந்தி குடும்பத்தைச் சேர்ந்த இந்த மலர் மலரும் அழகே அழகு! ஆண்டுக்கு ஒருமுறை, ஜூலை,




ஆகஸ்ட் மாதங்களில், அதுவும் ஒரே ஒரு நாள் நள்ளிரவில், பூக்குமாம். ரிக்வேதத்திலும் இதர புராணங்களிலும் இந்த மலர் அதிகம் பேசப்பட்டுள்ளது என்று ஆன்மீக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்த மலரின் மீது அமர்ந்து ப்ரும்மா தவம் செய்ததினாலும், தாமரை மலரைப் போன்றஅமைப்பு கொண்டிருப்பதாலும் இதன் பெயர் “ப்ரும்ம கமலம்” என்றாகியது. கிரேக்கர்களும் ரோமானியர்களும் இதனை காதல் மற்றும் கருவுறுதலுக்கு அடையாள மலராகக் கருதுகின்றனர்.


தூய்மையின் சின்னமாகவும் விளங்கும் இந்த மலர், மருத்துவ ரீதியாகவும் பல அதிசய குணங்களைக் கொண்டுள்ளது. சரும நோய்கள், புற்று நோய் போன்றகடும் பிரச்சினைகளுக்கு தீர்வாகும் இந்த மலர்.

இந்த பேரதிசிய மலரின் குணாதிசியங்களால் ஈர்க்கப்பட்ட பாரத அரசாங்கம் இதற்கு அரச கௌரவத்தை அளிக்கும் பொருட்டு, 1982 ஆம் ஆண்டு, இவ்வெண்ணிறமலரின் உருவம் மற்றும் தாவரவியல் பெயரான “சசுரேயா ஒப்வலாட்டா” (SAUSSUREA OBVALLATA) என்றும், தேவநாகரி எழுத்தில் “ப்ரும்மகமல்” என்றும் பெயரிடப்பட்ட தபால் முத்திரையை வெளியிட்டது. இதன் மதிப்பு இரண்டு ரூபாய் எண்பத்தி ஐந்து காசுகள் என்று நிர்ணயித்துள்ளது.


2007-ம் ஆண்டு, உத்தரகண்ட் மாநிலம் தோற்றுவிக்கப்பட்ட போது, இந்த மலரை மாநில

மலராக அறிவித்து கௌரவித்தனர் பத்ரிநாத், கேதாரநாத் ஆலயங்களில் இந்த மலர் அர்ச்சனைக்குக் கிடைக்கிறது. நள்ளிரவில் மலரும் இந்த தெய்வீக மலர், சூரியக் கதிர் பட்டதும் தன்னை முழுவதுமாக மூடிக்கொண்டு விடுகிறது. நள்ளிரவில் இதன் முழுமையான மலர்ச்சியை தரிசித்து, மானசீகமாக ப்ரும்மாவை நினைத்து, எத்தகைய நியாயமான வேண்டுதலை பிரார்த்தித்தாலும் அப்படியே கைகூடும் என்று நம்பப்படுகிறது. இதனை “ப்ரும்மாவின் நாடிக்கொடி” என்றும் அழைக்கிறார்கள். மிக அரிதாக, மிக சிலரின் வீட்டுத்தோட்டத்தில் இது மலர்ந்து, மக்களை ஈர்த்துள்ளது. நள்ளிரவில் மலர்ந்தாலும் மக்கள் பயபக்தியுடன் வழிபடுவதைக் காணும்போது, மனம் மிகவும் மகிழ்ச்சியில் நிறைகிறது. முடிந்தால் வசதி இருக்கும் உங்களில் சிலர், இந்த மலரை வளர்த்துப் பாருங்களேன். படைப்புக் கடவுளின் கருணையினால், உங்கள் இல்லத்திலும் ப்ரும்ம கமலம் மலர்ந்து மணம் வீசி வாழ்வு செழிக்கக்கூடும்.

அடுத்து நம் தமிழ்க் கடவுள் முருகனுக்குரிய கடம்ப மலரோடு பேசுவோம்.

99940 89133

99940 89140

SRI SASTHA CATERING


We are Supplying Meals,
Tiffin & Marriage Sear
Variation in Order


28, Senthuran Colony, 2nd Street, Muvarasempet, Madipakkam, Chennai - 91

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌளி பாகம் - 3 பகுதி - 42

*சமீபத்தில் "ஜான் கார்டன்" என்பவர் எழுதியுள்ள "தி கார்டன்" (THE GARDEN) எனும் புத்தகத்தை படித்தேன். அதன் மூலம் கற்றுக் கொண்டதை உங்களிடம் பகிர விரும்புகிறேன்.*

*இப்புத்தகத்தைப் பற்றி பிரபல எழுத்தாளர் திரு. என் சொக்கன் மிக விவரமாக "ராணி - வாராந்திர" பத்திரிகையில் எழுதியுள்ளார்.*

*அப்புத்தகத்தில், "நம்மைச் சுற்றி நடக்கும் தீயவற்றில் அதிகம் கவனம் செலுத்தாமல், வாழ்க்கையிலும், சமூகத்திலும், ஊரிலும், நாட்டிலும் நல்லவற்றைமட்டுமே காண வேண்டுமென்றால் '5D' க்களை முற்றிலும் தவிர்க்க வேண்டும்" என்கிறார் ஜான் கார்டன்.*

*முற்றிலும் தவிர்க்க வேண்டிய* **'5D'** *க்கள் :*

DOUBT -- *சந்தேகம் (அ) ஐயம்*

DISTORT -- *திரிபு (அ) திரித்துக் கூறுவது*

DISCOURAGE -- *ஊக்கமிழக்கச் செய்யும் பேச்சுக்கள் (அ) தகவல்கள்*

DISTRACT -- *கவனச்சிதறல்களை ஏற்படுத்தும் விஷயங்கள்*

DIVIDE -- *பிரிப்பது (அ) பிரிக்க பேசும் பேச்சுக்கள்*

"இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்".

*(அதிகாரம் – 86, குறள் – 854)*

“துன்பங்களிலேயே பெருந்துன்பம் எனப்படும் வேற்றுமை இல்லையென்றால், அது இன்பங்களுக்குள் மேலான இன்பத்தை அளிக்கும்” என்கிறார் வள்ளுவர் பெருமான்.

'DOUBT' எனப்படும் “சந்தேகம்”, ஒரு பணியை செய்யும் முன்பு தோன்றலாம். தேடி, அலைந்து பிடித்த பணியைப் பற்றி யார் சந்தேகம் கிளப்பினாலும், அதை மண்டையில் ஏற்றிக் கொண்டு குழப்பாமல் இருக்க வேண்டும். சந்தேகத்தை நிவர்த்தி செய்வதில் தீவிரம் காட்ட வேண்டுமே தவிர அதில் மூழ்கி விடக்கூடாது.

'DISTORT' எனப்படும் திரித்து சொல்லப்படும் செய்திகளை நம்பி குழம்பக் கூடாது. அதற்கு பதிலாக உண்மையானச் செய்தி தானா என்று ஆராய வேண்டும்.

'DISCOURAGE' எனப்படும் நம் ஊக்கத்தின் நோக்கத்தை மாற்றுபவர்கள் நம்மைச் சுற்றி எப்பொழுதும் இருந்துக் கொண்டேயிருப்பார்கள். நாம் தான், நம் முடிவுகளிலிருந்து மற்றவர்களால் “டிஸ்கரேஜ்” ஆகக் கூடாது.

இன்று 'DISTRACT' எனும் கவனச்சிதறல்கள் நம்மை தாக்காமல், மொபைல், லேப்டாப், இன்ஸ்டா, ட்விட்டர் என்று பலவற்றிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டிய சூழலில் உள்ளோம். பெற்றோர்களாகிய நீங்கள் உங்களுக்கு நடைமுறைபடுத்தினால் குழந்தைகளுக்கும் வழிமுறையை வகுக்க இயலும். இலக்கை மாற்றிக் கொண்டேயிருப்பது இன்று ஃபேஷனாகி விட்டது என்பதை நினைவில் கொண்டு, சிறு வயதில் எல்லா கிளாஸுக்கும் அனுப்பியது போன்றதவறுகள் நடக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

ஐந்தாவதாக, திரு.ஜான் கார்டன் கூறிய 'DIVIDE'

(பிரிப்பது) மிக, மிக முக்கியமானது. இன்று ஏழை, பணக்காரன், இனம், ஜாதி, மொழி, மாநிலம், நாடு, மதம் என்று ஏகப்பட்ட பிரிவினைகள் நம்மைச் சுற்றியுள்ளன. இத்தகைய சூழலில் உங்கள் மகன் (அ) மகள் பணியாற்றவேண்டிய கட்டாயம். அங்கு பிரித்து பார்க்கப்படும் பொழுது ஏற்படும் வலி, பல சமயங்களில் பணியை விட்டு விலகி விடுமளவிற்கு கோபம் என்று வாழ்க்கையின் யதார்த்தத்தை உங்கள் பாதுகாப்பிலிருந்து விலகி, அனுபவிக்கும் பொழுது, சாய ஒரு தோளாக நீங்கள் இருந்தால் போதும். உங்கள் மகன் (அ) மகள் வேற்று மனிதர்களை தேடமாட்டார்கள்.


நான் இங்கு விவரித்திருப்பது கையளவு தான். இதற்குள் சென்றால் கடலளவு உள்ளது.

வாருங்கள், மேலும் வேலைக்குச் செல்ல ஆரம்பிக்கும் பொழுதே “வீட்டு வேலைகளை பெண் குழந்தைகள் பழக வேண்டுமா, கூடாதா” என்று அடுத்த மாதத்திலிருந்து பேசுவோம்.

தொடரும்...

**ஸ்ரீ கோகுல கிருஷ்ணா கோசாலை**
**ஸ்ரீ கிருஷ்ணாமிருதம் பப்ளிக் சாரிடபள் ட்ரஸ்ட்**
**(80 G Available)**

**756 பசுக்கள் பராமரிப்பு செய்யும் ஸ்தாபனம்**
1. கோ பூஜை செய்ய 2. கோ தானம் செய்ய
3. பசு பராமரிப்பு செய்ய
4. பிதுர்கள் திருப்தி அடைய –
(மஹாளய பட்ச காலத்தில்)


பசு பாதுகாப்பு செய்வது கோடிபுண்ணியம்

தொடர்பு : **ஸ்ரீ நடராஜன்**
ஊத்துக்கோட்டை, திருவள்ளூர் - 602 023
**8940224744 / 9363111799**

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- Breast Pumps
- Blood Glucose Meters
- BP Meters
- Alpha Beds
- Adult Diapers
- Under Pads
- Wheel Chairs
- Physio Products
- Home Sleep Study
- Oxygen Concentrator
- CPAP / Bi Pap
- Pulse Oxymeters
- Nebuliser
- Morning Walker
- Weighing Scale
- Air Purifier




**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

## இராமாயணம் தரும் படிப்பினை

சென்றமாத தொடர்ச்சி...

பொன்மானைத் தொடர்ந்து சென்ற இராமன் மாரீசனை அழித்து தன் குடிலுக்குத் திரும்பலாம் என்று நினைத்தபோது இலட்சுமணன் எதிரே வர கண்டான். ஏன் சீதையைத் தனியே விட்டு விட்டு வந்தாய்? நல்ல சகுனங்கள் தென்படவில்லை என்றபோது இலட்சுமணன் பர்ணகுடியில் நடந்ததைச் சொன்னான். இருவரும் பர்ணகுடி அருகே வந்த போது அது வெறிச்சென்று ஆள் அரவம் இல்லாமல் இருந்தது. நிச்சயம் அரக்கர்கள் சதி இது. சீதையைக் கொன்றிருப்பார்கள். அங்குள்ள பட்சி, மிருகம், நதியிடம் சீதை எங்கே, சீதை எங்கே என்று இராமன் கேட்டான். இலட்மணன் சாந்தப்படுத்தியும் பைத்தியம் பிடித்தவன் போல் புலம்பி அழுதான் ஸ்ரீராமன். எந்த தெய்வமும் சீதைக்கு துணை இல்லையே, நல்லவர்களுக்கு தீங்கிழைத்த இந்த உலகத்தை அழிப்பது தான் சரி என்று தனது மனநிலையை முற்றிலும் இழந்து பேசினான் ஸ்ரீராமன். ஒருவர் தவறு செய்தால் உலகத்தையே அழிப்பேன் என்று கூறுவது சரியல்ல என்று இராமனிடம் இலட்சுமணன் கூறினான். பெரும் துயரத்தால் தங்கள் மனம் கலங்கியுள்ளது. யாருக்கு வேண்டுமானாலும் எப்படிப்பட்ட தாங்கமுடியாத கஷ்டம் உலகில் வரலாம். ஆனால் ஸ்ரீராமருக்கு இலக்குவன் போல் ஒரு நல்லவர் ஆறுதல் கூறஅருகே இருக்க வேண்டும். இன்றும் கூட நாம் பார்க்கலாம். கணவனை இழந்தால் ஒரு பெண் குழந்தைக்காகவோ அல்லது எப்படியோ தன்னை சமாளித்துக் கொள்வாள். ஆனால் மனைவி இல்லாமல் இருந்தால் அந்தக் குடும்பம் படும் அவலம், அந்த கணவனின் துயரம் வார்த்தைகளால் சொல்ல முடியாது. கிட்டத்தட்ட சீதையைப் பறி

கொடுத்ததைப்போலத் தான் ஸ்ரீராமன் தவித்தான்.

பிறகு ஜடாயுவை சந்தித்தனர். குற்றுயிரில் இருந்த ஜீவன் நடந்த விபரத்தைச் சொல்லிவிட்டு இந்த உலகத்தை விட்டுச் சென்றது. இராம, இலட்சுமணர் பரிதவித்தனர். துக்கம் தாங்காமல் அவர்களால் பேசமுடியவில்லை. தந்தை போன்றஜடாயுவிற்கு முறைப்படி இறுதிச் சடங்குகள் செய்தனர்.

மோகம், மயக்கத்தின் காரணமாக ஸ்ரீராமர் சீதையை இழந்தார். உண்மையான பாதுகாவலராக இருந்த இலக்குவனை அநியாயமாகச் சந்தேகப்பட்டாள் சீதை. அதனால் இராவணனிடம் மாட்டிக் கொண்டாள். சாதாரணப் பெண்போல் சீதை நடந்து கொண்டதன் விளைவு தான் இது. மோகம் என்பது மனிதர்களை அழிவின் எல்லைக்கே கொண்டு போய்விடும் என்பதுதான் இந்த சம்பவத்தில் இருந்து தெரிகின்றது.

ஜடாயு மூலம் சீதையை இராவணன் தூக்கிச் சென்ற செய்தி தெரிந்ததும் சகோதரர்கள் இருவரும் மிகவும் வேதனைப்பட்டனர்.

இலட்சுமணா நீ அந்த மானை மாய மான் மாரீசனின் வேலை என்ற சொன்னதைக் கேட்காமல் சீதைக்காக நான் மான் பின்னே ஓடினேன். நீயும் என் சொல்லைக் கேட்காது சீதையின் வார்த்தைகளால் தாக்கப்பட்டு அவளைத் தனியே விட்டு வந்தாய். உன் மீது பிழை எதுவுமில்லை. என் மீது தான் பிழை என்று கூறினார் இராமர். ஜடாயு கூட இறக்கும் தருவாயில் நீங்கள் இருவரும் சீதையைத் தனியே விட்டு எங்கு சென்றீர்கள்? இருவரும் அவளை நிர்கதியாக விட்டு சென்றது குற்றம் என்று கூறியது.

தொடரும்...

**- காந்தாமணி நாராயணன்**

# சென்னை திருமயிலை ஸ்ரீகபாலீஸ்வரர் திருக்கோயில்

(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.எட்., பரமக்குடி)

தமிழகத்தின் தலைநகராம் சென்னை மயிலாப்பூரில் இக்கோவில் அமைந்துள்ளது. சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்த 8 கி.மீ. தொலைவில் உள்ளது.

தொண்டைநாட்டில் பாடல் பெற்ற 32 திருத்தலங்களுள் இது 24 ஆவது தலமாகும்.

மயில் + ஆர்ப்பு + ஊர் = மயிலாப்பூர் ஆகியது. மயில்கள் நிறைந்த இடம்; மயில்கள் ஆரவாரம் செய்யுமிடம் என்பது பொருள். மயிலாப்பூர் என்பது மருவி மயிலை ஆயிற்று. பிரம்மாண்ட புராணம். இத்தலத்தை மயூரபுரி, மயூரங்கரி என்று கூறுகிறது.

உமையவள் இங்கு வந்து மயிலாக உருவெடுத்து ஈசனை வழிபட்டதால் மயிலை எனப்பெற்றது. கோமுக அசுரன் களவாடிச் சென்ற வேதங்களைத் திருமால் மீட்டு வந்து இங்கு சேர்த்ததால் இது வேதபுரி ஆயிற்று. சுக்கிராச்சாரியார் இங்குள்ள ஈசனை வழிபட்டு அருள் பெற்றமையால் இது சுக்ரபுரி எனப்பெற்றது.

காபாலிகர்கள் இங்கு ஈசனைப் போற்றி வழிபட்டதால் கபாலீஸ்வரம் எனப்பெற்றது.

மூவேந்தர் காலத்தில், புலியூர் கோட்டத்துப் புலியூர் நாட்டைச் சேர்ந்ததாகிய மயிலை என்றும், வடமொழியில் கேகயபுரி என்றும் பெயர் கொண்டது. அப்பர் பெருமானின் திருத்தாண்டகத்தில் 'மயிலாப்பினுள்ளார்' எனக்கூறியிருப்பதால் இது 'மயிலாப்பி' எனவும் பெயர் பெற்றது.

கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமழிசை ஆழ்வார், 'மாமயிலை' என்றும் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமங்கை ஆழ்வார் 'மயிலை', 'மா மயிலை' என்றும், சுந்தரர், 'தொன்மயிலை' என்றும் இத்தலத்தைக் குறிப்பிடுகின்றனர்.

நந்திக்கலம்பகம் 'மயிலாபுரி' எனக்கூறுகிறது.

*சமணர்கள் இத்தலத்தை பத்மநாதபுரம், வாமநாதபுரம் என்னும் பெயர்களால் அழைத்தனர்.*

*முதலாம் குலோத்துங்கன் காலத்தில் கலிங்கத்துப்பரணியில், 'பண்டைமயிலை' என்று ஜெயங்கொண்டார் குறிப்பிடுகிறார். கி.பி. 13ஆம் நூற்றாண்டில் இங்கு வந்த வெனிஸ் வணிகர் மார்கோ போலோ, 'மயில்கள் நிறைந்தபகுதி' என்று குறிப்பிடுகிறார். போர்ச்சுகீசியர்கள், 'மெலியபூர்' என அழைத்தனர். 17-ம் நூற்றாண்டில் மிலாப்பூர் எனப்பெற்றது. பின் ஆங்கிலேயர் மைலாப்பூர் என அழைத்தனர். அதுவே இன்று நிலைத்துவிட்டது.*

*அப்பர், திருஞானசம்பந்தர், சுந்தரர் மற்றும் சேக்கிழாரால் பாடல் பெற்ற திருத்தலம் இது.*

*திருமயிலை உலா, திருமயிலைக்கலம்பகம், திருமயிலையமக அந்தாதி; காலிசர் பதிகங்கள்; திருமயிலைக் கபாலிசர் இரட்டை மணிமாலை, திருமயிலைப்பதிற்றுப் பத்தந்தாதி; திருமயிலாப்பூர் பதிகங்கள்; கங்காதர நாவலர் இலக்கியங்கள்; ஸ்ரீ கபாலிஸ்வரர் தோத்திரம், திருமயிலை ஸ்ரீ கபாலிஸ்வரர் துதிப் பாடல்கள்; கபாலிசர் குறுங்கழி நெடில், திருமயிலை நான்மணி மாலை; பாபநாசம் சிவன் கீர்த்தனைகள், திருமயிலைக் குறவஞ்சி; திருமயிலைக் கபாலிசன் மாலை; திருமயிலை வெண்பா; அந்தாதி; திருமயிலை ஸ்ரீ கபாலீஸ்வரர் துதி ஆகியவை திருமயிலை ஸ்ரீ கபாலீஸ்வரர் மீது பாடப் பெற்ற நூல்கள்.*

*கற்பகவல்லியம்மை பதிகம்; திருமயிலைக் கற்பகவல்லி அஷ்டகம்; கற்பகவல்லி மாலை; கற்பகவல்லியம்மா பஞ்சரத்தினம்; ஸ்ரீ கற்பகாம்பாள் பாடல்கள்; கற்பகாம்பிகை அந்தாதிப்பதிகம்; திருமயிலாபுரிக் கற்பகாம்பிகை மாலை; திருமயிலைக் கற்பகாம்பிகை பிள்ளைத்தமிழ் ஆகிய நூல்கள் ஸ்ரீ கற்பகாம்பாள் மீது பாடப்பெற்ற நூல்கள் ஆகும்.*

தொடரும்...

## தருவின் நிழலில்

### மூங்கில் - BAMBUSOIDEAE - BAMBOO

*மூங்கிலுக்கு பாசு என்றொரு பெயரும் உண்டு. மூங்கில் வனமாக இருந்த இன்றைக்கு திருப்பாசூர் என்றழைக்கப்படும் திருவள்ளூரிலிருந்து மேற்கே 5 கி.மீ. தொலைவிலுள்ள இந்த கிராமத்தில் 249வது தேவாரத் தலமாகவும், தொண்டை நாட்டின் 16வது தலமாகவும் சிவன் அருள்பாலிக்கிறார்.*

*மூங்கில் வனத்தின் அடியில் சுயம்புவாக சதுர வடிவில் தோன்றியவர், எனவே பாரசுநாதர் என்றபெயரும் உண்டு. காயம்பட்ட லிங்கம் என்பார் “தீண்டாத் திருமேனி” என்றும் அழைக்கப்படுகிறார். கருவறைவிமானம் “கஜப்பிரஷ்ட” அமைப்பை கொண்டது. இத்தலத்தின் தலவிருட்சமாக “மூங்கிலும்” தீர்த்தமாக “சோம மங்கள தீர்த்தமும்” விளங்குகிறது.*

*தட்சன் நடத்திய யாகத்தில் சிவனின் அனுமதியின்றி கலந்துகொண்ட பார்வதி தேவி சிவனிடம் பெற்றசாபத்தின் விளைவாக, அன்னை பூமியில் அவதரித்து இத்தலத்தில்தான் சிவனை அடைந்தார். இத்தலத்திற்கு வந்த அம்பாளை “தன் காதலி” என்று ஸ்வாமி அரவணைத்ததால் அம்பாளுக்கு “தங்காதலி” எனப் பெயர் அமைந்திற்று.*

*அருள்மிகு “தங்காதலி சமேத வாசீஸ்வரர்” திருக்கோவில், வழக்கமாக அனைத்து சிவாலயங்களில் அன்னை இடப்புறமாக இருப்பார். ஆனால் இத்திருத்தலத்தில் சிவனுக்கு வலப்புறமாக சன்னதி கொண்டு அருள்புரிவதால் திருமணத் தடைகள் நீக்கும் சிறப்பு தலமாக விளங்குகிறது. வலப்புறம் அம்பாள் இருப்பதனால் இங்கே ஆன்ம சக்தி அதிகமாகும்.*

*இத்தலத்தின் கருவறை நுழைவாயிலின்*

இடப்புறத்தில் சிறிதும் பெரிதுமாக பதினொரு விநாயக உருவச் சிலைகள் ஏகாதச விநாயகர் என்றபெயரில் அருள் தருகிறார். பெருமாள் “வினை தீர்த்த ஈஸ்வரன்” என்றபெயரில் தனி சந்நிதியாக உள்ளார். அருகில் கேதுபகவானும் இருக்கிறார்.

பொய் சாட்சி சொன்னதால் சாபம் பெற்ற“தாழம்பூ” சிவனிடம் மன்னிப்பு கோரியதால், அதற்கு பரிகாரமாக மஹா சிவராத்திரி தினத்தன்று மட்டும் இத்தலத்தில் இரவு ஒரு கால பூஜையில் இறைவன் சிரசில் தாழம்பு வைத்து பூஜிக்கப்படுகிறது.

மூங்கில் தல விருட்சமாக இருக்கும் மற்றொரு தலம், தேனி மாவட்டம், பெரிய குளம் தாலுக்கா, தேவதானம்பட்டி அருள்மிகு மூங்கிலனை காமாட்சியம்மன் கோவிலாகும். இத்திருக்கோவிலில் மூலவராக சிலையோ, படங்களோ இல்லை, கருவறை“கதவினையே” காமாட்சியாக வழிபட்டு வருவதனால் “இக்கோவிலை கதவுக்கோவில் என்றும் அழைக்கின்றனர்.

மயிலாடுதுறைமாவட்டம், கீழ்ப்பெரும்பள்ளம் நவக்ரகங்களில் கடைசி க்ரஹமான கேதுபகவான் அருள்புரியும் அருள்மிகு சௌந்தர்ய நாயகி சமேத நாகநாத ஸ்வாமி திருக்கோவிலிலும், உலகப் பிரசித்திப்பெறறதிருநெல்வேலி அன்னை அருள்மிகு காந்திமதி சமேத நெல்லையப்ப ஸ்வாமி திருக்கோவிலிலும் “மூங்கில்” தலவிருட்சமாக இருந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறது.

தமிழகத்தின் நடுநாடு மற்றும் தொண்டை நாடுகளில் நடைபெறும் திருமண வைபவங்களில் அரசாணிக்கால் நடுதல் செய்து வழிபட்ட பிறகே சடங்குகள் தொடங்குவது இன்றளவிலும்

காலந்தொட்டு கடைபிடிக்கப்பட்டு வரும் வழக்கமாகும். இந்த அரசாணிக்கால் நடுதலில் முக்கியப் பங்கு பெறுவது மூங்கிலாகும். நேர்மறைசக்திகளை வழங்குவதாக நம்பிக்கை கொண்டு வீட்டினுள் மூங்கில் வளர்ப்பதை பலரும் கடைபிடித்து வருகின்றனர். குறிப்பாக சீன நாட்டில் சிறு சிறு அலங்கார தொட்டிகளில் வளர்த்து விற்பனை செய்கின்றனர். வாஸ்து குறைபாடு இருந்தால் மூங்கில் வளர்ப்பதன் மூலம் குறைகள் தீர்வதாகவும் நம்புகின்றனர்.

**- ஆதிரையன்**


**வேதபாரதி**
**வங்கி கணக்கு எண்கள் விபரம்**

| | | |
|---|---|---|
| Account No | : | 510909010005286<br>Current Account |
| IFSC Code | : | CIUB0000262 |
| Bank | : | City Union Bank |
| Branch | : | Velachery |

**வேதபாரதி செய்திகள் புத்தக**
**வங்கி கணக்கு எண்கள் விபரம்**

**சந்தா விவரம்**

*வருட சந்தா ரூ.200*
*10 வருட சந்தா ரூ.1500*
*வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட*

**VEDABHARATHI SEITHIGAL**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010246740 | IFSC : CIUB0000262**



Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042. Editor : **R. VENKATARAMAN, 9443495950**

## ஏகாதச ருத்ராபிஷேகம்

புதுச்சேரி வேதபாரதி சார்பில் ஒரு குழு அமைத்து, புதுச்சேரியின் பிரசித்திப்பெற்ற திருக்கோவில்களான அருள்மிகு வேதபுரீஸ்வரர் ஆலயத்தில் தினமும் அருள்மிகு மணக்குள விநாயகர் ஆலயத்தில் வாரந்தோறும் வேதபாராயணம் கடந்த நான்காண்டுகளுக்கும் மேலாக செய்து வருகிறார்கள்.

இதன் ஒரு பகுதியாக கடந்த 04.05.2024 சனிக்கிழமை தொடங்கிய அக்னி நட்சத்திரத்தின் கடும் வெயிலில், அதன் தோஷம் குறைந்து நகரம் குளிர் பெறவும், லோகம் க்ஷேமம் அடையவும், கடந்த சித்திரை மாதம் 23ம் தேதி, 06.05.2024 திங்கட்கிழமை ஈசனுக்கு ஏகாதச ருத்ராபிஷேகம் செய்யப்பட்டது.

25க்கும் மேற்பட்டோர் ருத்ரம் பாராயணம் செய்ய ஒவ்வொரு ஆவர்த்திக்கும் ஒரு திரவியமாக எம்பெருமானுக்கு அபிஷேகம் செய்து, கலசாபிஷேகமும் செய்து ஒவ்வொரு பிரசாதமாக நைவேத்யம் செய்யப்பட்டது.

முன்னதாக, விக்நேஸ்வர பூஜை, சங்கல்பம், ருத்ர ஹோமங்களுடன் துவங்கியது. பதினொரு ஆவர்த்திக்கும் பதினொரு, திரவியங்கள், பதினொரு கடங்கள், பதினொரு நைவேத்யம் என பிற்பகல் 2.30 மணியளவில் நிறைவு பெற்றது. நிறைவில் வேதபாரதியினர் குடும்பமாகவும், பெரியோர்களும் கலந்து கொண்ட சுமார் 250 பேர்களுக்கு அனைத்து வகை அன்னங்களும் பரிமாறப்பட்டது.

கலந்து கொண்டவர்களுக்கும், கைங்கர்யம் செய்தவர்களுக்கும் தாம்பூலம் வழங்கப்பட்டது. புதுச்சேரி வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாக நடைபெற்றஇந்த அரும் பெரும் நிகழ்ச்சியின் வாயிலாக அன்னை திரிபுரசுந்தரி சமேத வேதபுரீஸ்வரரின் அருட்கடாட்சம் அனைவருக்கும் கிடைக்க பிரார்த்திப்போம். //ஹர ஹர மஹாதேவ//

## அக்ஷய திரிதியை சிறப்பு நிகழ்ச்சி இரும்புலியூர்

கடந்த மாதம் 10.05.2024 வெள்ளிக்கிழமை அன்று அக்ஷய திரிதியை முன்னிட்டு சென்னை தாம்பரம் இரும்புலியூரில் அமைந்துள்ள சாந்த ஸ்வரூபிணி ஸ்ரீ வேம்புலி அம்மன் ஆலயத்தில் மகாலட்சுமி ஹோமம் மற்றும் குபேர லட்சுமி சிறப்பு பூஜைகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றன.

இந்த பூஜைக்கான முழு ஏற்பாடுகள் அனைத்தும் ஆஸ்தீக பந்து ஆன்மீக குழு மற்றும் வேதபாரதி ஊரப்பாக்கம் அமைப்பும் இணைந்து செய்யப்பட்டது. இதில் வேதபாரதி அமைப்பினர் மற்றும் குழந்தைகள் உட்பட 200க்கும் மேற்பட்ட உள்ளூர் ஆன்மீக பக்தர்களும் கலந்து கொண்டனர். ஸ்ரீ கணேஷ் வாத்தியார் தலைமையில் ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஹோமம் நடைபெற்றது. ஸ்ரீ மஹாலக்ஷ்மி மற்றும் குபேரலக்ஷ்மி உருவம் பொறிக்கப்பட்ட காயின் வழங்கப்பட்டு அவரவர் பொற்கரங்களால் அதற்கு குங்கும அர்ச்சனை செய்யப்பட்டு அவரவர்களுக்கு வழங்கப்பட்டது.

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை கோயில் அர்ச்சகர் திரு.முரளிக்கிருஷ்ணன் மற்றும் கோயில் நிர்வாகத்தினர் மிகவும் சிறப்பாக செய்து இருந்தனர். இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் பிரசாதங்கள் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியின் நிறைவாக நமது இந்து சனாதன தர்மத்தில் வேதபாரதி அமைப்பின் பங்கு குறித்து கோயில் அர்ச்சகர் திரு.முரளி கிருஷ்ணன் மற்றும் வேதபாரதி ஊரப்பாக்கம் அமைப்பின் சார்பில் திரு. M.கிருஷ்ணமூர்த்தி அவர்களும் சிறப்புரை ஆற்றினார்கள் நன்றி.



# ஸ்ரீ சங்கரா இலவச முதியோர் இல்லம்

ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை (Regd.)
பண்டித மேடு, திருப்போரூர் அருகில்

ஸ்ரீ காஞ்சி பெரியவர்களின் அருளாசியுடன், ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை ஓர் இலவச முதியோர் இல்லத்தை திருப்போரூர் அருகில் உள்ள பண்டித மேடு கிராமத்தில் நிர்வகித்து வருகிறது. அங்கு 50 முதியவர்கள் அமைதியாக வாழ்ந்து வருகின்றனர்; இந்த நிர்வாகம் உங்கள் ஆதரவை நாடுகிறது:

திருமண நாள், பிறந்த நாள், நினைவு நாள் போன்றவற்றில் ஒன்றை தேர்ந்தெடுத்து ரூ.3000/- அளித்தால் முதியோர் இல்லத்தின் ஒரு நாளின் செலவுக்கு ஆகும்.

தங்களுக்கு விருப்பமான தொகையை கீழ்க்கண்ட விலாசத்திற்கு "ஹிந்து சேவா சமாஜம் டிரஸ்ட்" **(HINDU SEVA SAMAJAM TRUST)** என்ற பெயரில் காசோலை அல்லது கணினி வழி வங்கி கணக்கு மூலமாக நேரடியாக அனுப்ப வங்கி கணக்கு எண்.: **914010003352646**; ஆக்ஸிஸ் பேங்க், துரைப்பாக்கம் கிளை, **IFS CODE : UTIB0001566** அனுப்பலாம். கணினி வழியாக அனுப்புவோர் அவசியம் பணம் அனுப்பிய விவரத்தை கீழ்காணும் எண்ணுக்கு எஸ்.எம்.எஸ். செய்யவும். இவ்வுதவி செய்பவர்களுக்கு 80G பிரிவின்படி வரிச்சலுகை உண்டு.

**ஸ்ரீ M. இராமகிருஷ்ணன் புதல்வர்கள்**
**அறங்காவலர்**
71, முதல் பிரதான சாலை, காந்தி நகர்,
அடையாறு, சென்னை - 600 020.
Cell : 93810 45601 | Email : amarabharathy7@gmail.com

# வருந்துகிறோம்



வேலூர் பிரபலமான வழக்கறிஞர் V.N. நரசிங்கராவ் மற்றும் வழக்கறிஞர் திருப்பத்தூர் சுப்ரமண்ய ஐயரின் பேத்தியும், பிரபல வழக்கறிஞர் V.N. சாமாராவ் அவர்களின் மகளும், புதுவை, பாக்கம் சந்திரசேகர் ஐயர் மருமகளும், சென்னை பிரபல வழக்கறிஞர் ஸ்ரீமான் S.சேஷாத்ரி அவர்களின் தர்மபத்தினியுமான வழக்கறிஞர் ஸ்ரீமதி.உமா மஹேஸ்வரி அவர்கள் 04.05.2024 ஏகாதசியன்று சிவலோக ப்ராப்தி அடைந்தார்கள்.

வழக்கறிஞர் ஸ்ரீமதி.உமா மஹேஸ்வரி அவர்கள் மிகுந்த தன்னம்பிக்கை கொண்டவர். பாரம்பரிய வழக்கறிஞர்களின் பெரிய குடும்பத்தில் பிறந்து புகுந்த வீட்டில் பெரிய மருமகளாக குடும்பத்தை வழிநடத்தியவர். பல்வேறு அறப்பணிகள் செய்தவர். புதுவை சக்தி வேதபாரதியின் உறுப்பினராக இருந்து பல சத்கார்யங்களில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

வேதபாரதியின் சத்கார்யங்களுக்கு தொடர்ந்து உதவிக்கரம் நீட்டும், திரு.பாலாஜி ராவ் மற்றும் சென்னையின் பிரபல ஆடிட்டர் திரு.குமரகுரு ஆகியோர் இவரது தம்பிகள் ஆவர். புதுவை வேதபாரதி பொறுப்பாளர் அட்வகேட் C. பட்டாபிராமன் அவர்களது மன்னியுமான ஸ்ரீமதி. உமாமஹேஸ்வரி அவர்களது ஆன்மா சத்கதியடைய பிராத்தனைகளுடன், இவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு வேதபாரதி சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

# ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம குழு துவக்க விழா - ஊரப்பாக்கம்

*26.05.2024 ஊரப்பாக்கம் வேதபாரதி அமைப்பின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம குழு துவக்க விழா நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதில் 50க்கும் மேற்பட்ட ஆன்மீக அன்பர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் வேதபாரதி அமைப்பின் செயலாளர் திரு.வெங்கட்ராமன் அவர்கள் கலந்து கொண்டு நமது சனாதன தர்மத்தில் வேதபாரதி அமைப்பு செயலாற்றி வருவது குறித்த முழு விபரங்களையும் மிகவும் தெளிவாக விளக்கினார்கள்.*

*இதற்கு அனைத்து ஏற்பாடுகளை செய்து மிகவும் சுவையான முறையில் சிற்றுண்டி வழங்கிய பாலமணிகண்டன் கேட்டரிங் நிர்வாகத்திற்கும், இநநிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் வேதபாரதி அமைப்பின் சார்பாக நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம். மற்றும் இக்குழுவில் இணைந்து கொள்ளாதவர் இதில் இணைந்து கொண்டு வேதபாரதி அமைப்பின் சார்பாக நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு முழு ஆதரவு அளித்திட அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.*

*இப்பாராயண குழுவில் கலந்து கொள்ள கீழ்க்கண்ட எண்களில் தொடர்பு கொண்டு தங்களின் பெயர், தொலைபேசி எண்ணை அனுப்பி பதிவு செய்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.*


**M. Krishnamoorthy - 9840838378 & S.Chandra Sekar - 9444132170**

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

Communication Address : S. SREEDHAR, 32, Ground Floor, Raja Nagar, 1st Main Road, Neelangarai, Chennai - 600 115.

Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071

Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org



## ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகளின் அருளுரை தெய்வத்தின் குரல் 3ம் பாகம் அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம் இது தான் அச்வமேதம்

இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

என்பது சாஸ்த்ர வசனம்


பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்
2. கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.
3. நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.
4. மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**


CITY UNION BANK
City Union Bank introduces
" Voice Biometric Authentication"
in CUB All in One Mobile Banking App
in Association with
KAIZEN VOIZ
simple-seamless-secure
IDRBT
Explore, Enable, Excel
VOICE
BIOMETRIC
"Your voice is your password"

RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/24-26

Date of Publication First Week of Every Month

**Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/24-26**

**Posted at Patrika Chennai, Egmore.**

**Posted between 1 - 7th June 2024**



வாழ்க்கையில் எத்துனை துன்பங்களை கடந்த போதிலும்
அதிலிருந்து மீள்வதற்கும், நம்பிக்கை பெறுவதற்கும்
இருப்பது மழலையின் சிரித்த முகம் ஒன்றே...

தரமான நகைகளுக்கு
சரியான முகவரி ....

சூர்யா ஜீவல்லர்ஸ்®

287, 288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன் : 0421 2241829

97862 41829 www.suryajewellers.co.in

To

______________________________

______________________________

______________________________

______________________________

**If not delivered please return to**

**VEDABHARATHI**

**No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.**